ஒருசில கணங்களுக்குள்ளாக இயேசுவானவர் அந்தப் பையனை விடுவித்தார் என்பதைக் கவனியுங்கள். அவர் விசுவாசத்தின்மூலம் அதைச் செய்தார். அவர் ''விடுதலைக்கான வகுப்பை'' நடத்துவதில் தமது நேரத்தை வீணாக்கவில்லை. தேவனால் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்களுக்குப் பிசாசுகளை விரட்ட மணிக்கணக்கான நேரம் தேவைப்படுவதில்லை.

மேலும் இயேசுவானவர் அந்தப் பிசாசை நோக்கிக் கூச்சல் போட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. விசுவாசத்தோடு இருப்பவர்கள் கூச்சல்போடத் தேவையில்லை. அந்தப் பிசாசை வெளியேறும்படி இயேசு வானவர் மறுபடியும் மறுபடியுமாகக் கட்டளையிடவும் இல்லை. ஒரு கட்டளை போதுமானது. இரண்டாவது முறை கட்டளையிடுவது சந்தேகம் கொண்டிருப்பதை ஒப்புக்கொள்ளுவதாக ஆகிவிடும்.

**சுருக்கம்**

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தனது முன்மாதிரியின் மூலமாகவும், தனது வார்த்தைகளின் மூலமாகவும் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்துப் போதிக்கிறார். தனது சீஷர்கள் சாத்தானின் தந்திரங்களை உறுதியாக எதிர்த்து நிற்கும்படியாகவும், கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியாகவும் அவர் இப்படிச் செய்கிறார். தனது சீஷர்கள் இப்போது காணப்படும் வேதாகமரீதியல்லாத ஆவிக்குரிய யுத்தத்தின் ''சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலத்த காற்றைப்'' பின்பற்றும்படி அவர்களை வழிநடத்து வதில்லை. இப்படிப்பட்ட செயல்முறைகளைப் பின்பற்றுகிறவர்கள் தாங்கள் யாரை ஜெயிக்கப்போவதாகச் சொல்லுகிறார்களோ அந்தச் சாத்தானால் உண்மையில் ஏமாற்றப்பட்டு, தவறான பார்வையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார்.



# 32

# உக்கிராணத்துவம்

மலைப்பிரசங்கத்தைக் குறித்த அத்தியாயத்தில் நாம் இயேசுவானவர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த உக்கிராணத்துவத்தைக் குறித்த போதனையைப் பற்றி ஓரளவு பார்த்தோம். அவர் அவர்களிடம் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்காமல் பரலோகத்தில் சேர்த்து வைக்கும்படி கூறினார். தாற்காலிகமான பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பவர்களின் மூடத்தனத்தை அவர் சுட்டிக்காட்டியது மட்டுமின்றி, அவர்களுடைய இருதயத்திலுள்ள அந்தகாரத்தையும் அவர் சுட்டிக் காட்டினார் (பார்க்க, மத். 6:19—24).

பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவர்களுக்குப் பணமே கடவுளாக இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் அதைச் சேவிக் கிறார்கள், அது அவர்களுடைய வாழ்க்கையை ஆளுகைசெய்கிறது. தேவனுக்கும் பணத்துக்கும் சேவைசெய்வது இயலாத காரியம் என்று இயேசுவானவர் அறிவித்தார். தேவனே நமது மெய்யான எஜமானராக இருக்கிறபடியால், அவர் நமது பணத்துக்கும் எஜமானராக இருக்கிறார் என்று அவர் சுட்டிக்காட்டினார். *வேறு எதையும்விடப் பணமே மக்களின் இருதயங்களைக் கைப்பற்றத் தேவனோடு போட்டி போடுகிறது*. நமது சொந்த உடைமைகளை நாம் விடாவிட்டால், நாம் அவருக்குச் சீஷராக இருக்க முடியாது என்று இயேசுவானவர் போதித்ததில் எந்தவித ஐயமும் இல்லை (பார்க்க, லூக்கா 14:33). கிறிஸ்துவின் சீஷர்களுக்கு எதுவும் சொந்தமாக இருப்பதில்லை. அவர்கள் தேவனுக்குச் சொந்த மானவைகளுக்கு உக்கிராணிகளாக இருக்கிறார்கள். தேவன் *தமது* பணத்தின்மூலம் காரியங்களைச் செய்யவும், *தமது* குணாதிசயத்தைப் பிரதிபலிக்கவும், *தமது* ராஜ்யத்தை விரிவுபடுத்தவும் விரும்புகிறார்.

இயேசுவானவர் உக்கிராணத்துவத்தைக் குறித்து அதிகமாகச் சொல்லியிருந்தாலும் அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் பலரால் அவருடைய வார்த்தைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

அதிகமான மக்கள் இன்றைய நாட்களில் பல்வேறு நுட்பமானதும் தந்திரமானதுமான வகைகளில் வெளிப்படும் ''செழிப்பைக் குறித்த கோட்பாட்டுக்கு'' ஆதரவாக வேதவசனங்களைத் திரித்துக் கூறுகிறார்கள். என்றாலும் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் கிறிஸ்து வின் எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி மக்களுக்குப் போதிப்பதிலேயே வாஞ்சை கொண்டிருக்கிறார். இப்படியாக அவர் தனது முன்மாதிரியின் மூலமாகவும், வார்த்தைகளின் மூலமாகவும் *வேதாகம ரீதியான* உக்கிராணத்துவத்தைப் போதிப்பார்.

உக்கிராணத்துவத்தைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை நாம் பார்க்கும் அதே வேளையில், செழிப்பைக் குறித்த பொய்யான போதனைக்குப் பொதுவான எடுத்துக்காட்டுகளையும் பார்ப்போம். இதைக் குறித்து நான் எழுதியுள்ள ஆங்கிலப் புத்தகத்தை எங்களுடைய இணைய தளத்தில் பார்க்கலாம்.

### தேவைகளைச் சந்திப்பவர்

ஒரு ஆக்கபூர்வமான கருத்தோடு நாம் துவங்குவோம். பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின் பேரில் பவுல் அப்போஸ்தலன் இப்படி எழுதியிருப்பதை நாம் அறிவோம்: ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' [பிலி. 4:19]. பலரும் அறிந்த இந்த வாக்குத்தத்தத்தைக் கிறிஸ்தவர்கள் அடிக்கடி மேற்கோளாகக் காட்டு கிறார்கள், உரிமையாக்கிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இதன் பின்னணி என்ன? பின்னணியோடு நாம் வாசிக்கும்போது, பவுல் ஏன் தேவன் பிலிப்பிய விசுவாசிகளின் தேவைகளைச் சந்திப்பார் என்ற நம்பிக்கையைப் பெற்றார் என்பதை அறிந்துகொள்ளுகிறோம்:

> ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது. மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியா விலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்ட தேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோ னிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப் பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின்





> கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தி யடைந்திருக்கிறேன். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்கு வார் [பிலி. 4:14—19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பிலிப்பிய கிறிஸ்தவர்கள் இயேசுவானவரின் நிபந்தனையை நிறைவேற்றியபடியால் அவர் அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பார் என்ற நிச்சயத்தைப் பவுல் பெற்றிருந்தார். அவர்கள் முதலில் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடினார்கள். பவுல் சபைகளை ஸ்தாபிப்பதில் ஈடுபடும்படியாக அவர்கள் உதாரத்துவமாகக் கொடுத்தது இதை நிரூபிக்கிறது. இயேசுவானவர் தமது மலைப்பிரசங்கத்தில் இப்படிச் சொல்லியிருப்பதை நினைவுகூருங்கள்:

> இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத் தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் [மத். 6:32—33].

எனவே பிலிப்பியர் 4:19 வசனத்தில் பவுல் கொடுத்துள்ள வாக்குத்தத்தம் அதை உரிமை கொண்டாடும் எல்லாக் கிறிஸ்தவர் களுக்கும் உரியதல்ல, அது முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுகிறவர்களுக்கு மட்டுமே உரியது என்பதை நாம் அறிகிறோம்.

### நமக்கு மெய்யாகவே தேவைப்படுவது எது?

மத்தேயு 6:32—33 வசனங்களிலுள்ள இயேசுவானவரின் வாக்குத் தத்தத்திலிருந்து நாம் வேறொன்றையும் கற்றுக்கொள்ள முடியும். சில வேளைகளில் நமது தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையே யுள்ள வேறுபாட்டைக் காண்பது கடினமாக இருக்கிறது. என்றாலும், நமது தேவைகள் என்ன என்பதை இயேசுவானவர் வரையறுத்துக் கொடுத்திருக்கிறார். ''இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டிய வைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்'' என்று அவர் சொல்லியிருக்கிறார்.

முதலில் தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுகிறவர் களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று இயேசுவானவர் சொல்லும் இந்தக் ''காரியங்கள்'' எவை? அவை உண்பது, குடிப்பது மற்றும் உடுப்பதாகும். இதைக்குறித்து எவரும் விவாதிக்க முடியாது. ஏனென்றால் இந்த வாக்குத்தத்தத்துக்கு முன்னால் இயேசுவானவர் இதையேதான் சொல்லியிருக்கிறார் [பார்க்க, மத். 6:25—31]. உணவும்,

பானமும், உடைகளுமே நமது மெய்யான சரீரப்பிரகாரமான தேவைகளாக இருக்கின்றன. இயேசுவானவரும் அவரோடு பயணமாகச் சென்ற அவருடைய சீஷர்களும் இவைகளை மட்டுமே கொண்டிருந்தார்கள்.

நமது தேவைகளைக் குறித்த இயேசுவானவரின் வரையறையைப் பவுலும் ஒப்புக்கொள்ளுகிறார். அவர் தீமோத்தேயுவுக்கு இப்படி எழுதியிருக்கிறார்:

> போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். *உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.* ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் (1 தீமோ. 6:6–10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

உணவும், உடையுமே சரீரப்பிரகாரமாக நமக்குத் தேவையானவைகள் என்று பவுல் நம்பினார். இல்லாவிட்டால் இவைகள் போதுமானவை என்று இருக்கும்படி அவர் சொல்லியிருக்க மாட்டார். இது பிலிப்பிய கிறிஸ்தவர்களுக்குத் தேவன் அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் சந்திப்பார் என்று அவர் சொல்லியிருப்பதிலிருந்து சற்றே வேறுபட்ட பார்வையாகத் தோன்றுகிறது. சில பிரசங்கிமார்கள் அந்த வசனத்தைக் குறித்த விளக்கத்தைக் கொடுக்கும்போது அது ''என் தேவன் உங்களுக்கு எல்லாப் பேராசைகளுக்கும் ஏற்பக் கொடுப்பார்'' என்று அர்த்தம் கொண்டிருப்பதாக நாம் நினைக்கிறோம். என்றாலும், உணவையும் உடையையும் குறித்தே நாம் திருப்தியடைய வேண்டும் என்றிருக்கும் வேளையில் நாம் மெய்யாகவே வைத்திருக்கும் காரியங்களைக் குறித்து அதிக மனநிறைவு அடைய வேண்டும் அல்லவா? நம்மில் பெரும்பாலானவர்கள் உணவுக்கும் உடைக்கும் அதிகமாகவே வைத்திருக்கிறார்கள் அல்லவா?

### திருப்தியில்லாமை

நமக்கு மெய்யாகவே தேவைப்படுவதைவிட இன்னும் அதிகமான காரியங்கள் தேவைப்படுகின்றன என்று நாம் நினைப்பதே பிரச்சினையாகும். தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்தபோது அவர்





களுக்கு எதுவுமே சொந்தமாக இல்லை என்பதை நினைத்துப் பாருங்கள். ஆனால் அவர்கள் பரதீசில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். நாம் பொருட்களைச் சேர்ப்பதின்மூலம் சந்தோஷப்பட வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. இயேசுவானவர் ஒருபோதும் ஒரு குளியலறையில் ஷவரின் கீழாக நின்று குளித்தது கிடையாது என்பதை நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? அவர் தமது ஆடைகளை ஒரு துணிதுவைக்கும் இயந்திரத்தின்மூலம் சுத்தப்படுத்தவில்லை. அவர் ஒரு குளிர்சாதனப் பெட்டியின் கதவை ஒருபோதும் திறந்ததில்லை. அவர் ஒரு காரையோ, ஏன் ஒரு சைக்கிளையோ ஒருபோதும் ஓட்டியதில்லை. அவர் ஒருபோதும் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கவில்லை, எவரோடும் தொலைபேசியில் பேசவில்லை, மின் அடுப்பில் உணவு சமைத்ததில்லை, ஒலிபெருக்கியின் மூலமாகப் பிரசங்கம் செய்ததில்லை. அவர் வீடியோ படத்தையோ அல்லது தொலைக்காட்சியையோ பார்த்ததில்லை. மின்விளக்கை எரியச் செய்ததில்லை. வெப்பத்தைத் தணிக்க ஏர் கண்டிஷனரையோ அல்லது மின்விசிறியையோ பயன்படுத்தியதில்லை. அவரிடம் கைக்கடிகாரம் கிடையாது. அவருடைய அலமாரி நிறைய ஆடைகள் அடுக்கிவைக்கப்படவில்லை. இப்படியிருக்கும்போது அவரால் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடிந்தது?

அமெரிக்க ஐக்கிய நாட்டில் (உங்களுடைய நாட்டிலும்கூட) இந்தப் பொருட்களை மக்கள் பயன்படுத்தும்போது அவர்கள் எப்படியாகச் சந்தோஷப்படுகிறார்கள் என்று காட்டும் விளம்பரங்கள் எல்லோரையும் தாக்குகின்றன. இதன் விளைவாக நாம் எவ்வளவு அதிகமான பொருள்களைப் பெறுகிறோமோ அவ்வளவாகச் சந்தோஷப்பட முடியும் என்று நினைக்கும்படி நாம் மூளைச்சலவை (அல்லது மூளையை அசுத்தமாக்குதல்) செய்யப்படுகிறோம். நாம் எவ்வளவுதான் பொருட்களைச் சேர்த்தாலும் அதில் திருப்தியடைவதில்லை. இயேசுவானவர் இதைத்தான் ''ஐசுவரியத்தின் மயக்கம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார் (மத். 13:22). பொருட்கள் சந்தோஷத்தைக் கொடுப்பதாக வாக்களித்தாலும் அவை அதை நிறைவேற்றுவதில்லை. இன்னுமதிகமாகப் பொருட்களைச் சேர்க்க வேண்டும் என்ற உலகத்தாரின் ஓட்டத்தில் நாமும் சேர்ந்துகொள்ளும்போது, நாம் உண்மையில் விக்கிரகாராதனை செய்கிறவர்களாக, பணத்துக்கு அடிமைகளாக இருக்கிறோம். தேவனையும், அவரிடத்தில் அன்புகூர வேண்டும், நம்மிடத்தில் அன்பு கூருவதுபோலப் பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும் என்ற பிரதான கற்பனைகளையும் மறந்துபோகிறோம். இந்தக் காரியத்தைக் குறித்துத் தேவன் இஸ்ரவேலரை எச்சரித்திருக்கிறார்:

> உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனை

> களையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கை யாயிரு. நீ புசித்துத் திர்ப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும்போதும், உன் ஆடு மாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக் கும்போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவரும்... உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும் [உபா. 8:11–14].

இதைப் போலவே, ஒரு மெய்யான விசுவாசி கவனம் சிதைவதற்கு இடம் கொடுப்பாரானால், அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை ''ஐசுவரியத்தின் மயக்கம்'' நெருக்கிப் போட்டுவிடும் என்று இயேசுவானவர் எச்சரித்திருக்கிறார் [பார்க்க, மத். 13:7, 22]. பவுல் ''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது'' என்று எச்சரித்திருக்கிறார். ''சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக் கிறார்கள்'' என்று அவர் சொல்லுகிறார் [1 தீமோ. 6:10]. எபிரெய நிருப ஆசிரியர் நமக்கு இப்படிப் போதித்திருக்கிறார்: ''நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே'' [எபி. 13:5]. செல்வத்தின் அபாயங்களைக் குறித்து வேதவசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்புகளுக்கு இவை மாதிரிகளாக இருக்கின்றன.

### பணமே எஜமானாக இருக்கும்போது...

தேவனோடுள்ள நமது உறவு எப்படியிருக்கிறது என்பதற்குப் பணத்தோடு நாம் எப்படி இடைபடுகிறோம் என்பது சிறந்த அளவுகோலாக இருக்கிறது. அதைப் பெறுவதற்காக நாம் எப்படி நேரத்தைச் செலவழிக் கிறோம், அதைப் பெற்ற பிறகு அதைக் கொண்டு என்ன செய்கிறோம் ஆகியவை நமது ஆவிக்குரிய வாழ்க்கை எப்படியிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகின்றன. பணத்தை நாம் வைத்திருக்கும்போதும், பணம் இல்லாதிருக்கும்போதும் அதுவே வேறு எதையும்விட அதிகமாக நம்மைச் சோதனைக்கு இடம்கொடுக்க வைப்பதாக இருக்கிறது. பணமானது இரண்டு பெரிய கட்டளைகளை நாம் வெறுக்கும்படி செய்கிறது, ஒரே தேவனுக்கு மேலாக அது கடவுளாக இருக்கக் கூடியது, அது நம்மை நாமே அதிகமாக நேசிக்கும்படியும், பிறரிடம் குறைவாக அன்பு காட்டும்படியும் தூண்டுகிறது. இதே வேளையில் தேவன்மீதும் நமது அயலார்மீதும் நமக்குள்ள அன்பை நிரூபிக்கவும் நம்மால் பணத்தைப் பயன்படுத்த முடியும்.





தேவன் தன்னை ஆளுகை செய்ய அனுமதிக்காமல் பணமே தன்னை ஆளுகைசெய்ய அனுமதித்த ஒருவனைக் குறித்த உவமைக் கதையை இயேசுவானவர் சொல்லியிருக்கிறார்:

> அல்லாமலும், ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிற தற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத் திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேர்த்து வைத்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரிய வானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார் [லூக்கா 12:16–21].

இந்த ஐசுவரியவான் அதிகமாக மூடத்தனம் கொண்டவன் என்று இயேசுவானவர் சித்திரித்திருக்கிறார். ஆரோக்கியம், விளைச்சலைக் கொடுக்கும் நிலம், விவசாயத்தில் திறமை இவைகளால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தாலும், அவன் தேவனை அறிந்திருக்கவில்லை. இல்லாவிட்டால் விளைந்த தானியங்களைச் சேமித்துவைத்து, புசித்துக் குடித்து சுயநலமான மகிழ்ச்சியில் இளைப்பாறுவதை அவன் தெரிந்து கொண்டிருக்க மாட்டான். மாறாக, தான் தேவனுடைய உக்கிராணி என்பதை உணர்ந்து, தனது ஆசீர்வாதத்தைக் குறித்து என்ன செய்வது என்பதை அறியத் தேவனை நாடியிருப்பான். அவன் தனது அபரிமிதமான விளைச்சலை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும் படியும், இப்படிப் பகிர்ந்துகொள்ளுவதற்காகத் தொடர்ந்து அபரிமிதமான விளைச்சலுக்காகப் பாடுபடும்படியும் தேவன் ஆலோசனை சொல்லி யிருப்பார். இதற்கு ஒரே மாற்றான காரியம், அவன் தனது விவசாயத்தை விட்டுவிட்டுத் தேவன் தன்னை அழைத்திருக்கும் ஊழியத்தில் சுய ஆதரவு பெற்றவனாக ஈடுபடுவதாகும்.

இயேசுவானவரின் உவமைக்கதையில் வரும் ஐசுவரியவான் தனது மரணத்தைக் குறித்துத் தவறான கணக்குப் போட்டிருந்தான். அவன் நித்தியத்துக்குக் கடந்து செல்ல ஒரு சில மணி நேரமே எஞ்சியிருந்த வேளையில், தான் பல ஆண்டுகளாக வாழப்போவதாக அவன் நினைத்திருந்தான். இயேசுவானவர் சொல்லியதின் கருத்து மாற்ற முடியாததாகும்: நாம் ஒவ்வொரு நாளையும் அதுவே நமது கடைசி நாள் என்பதுபோலக் கழிக்க வேண்டும், எப்போதுமே தேவனுக்கு முன்பாகக் கணக்குக்கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

### இரண்டு பார்வைகள்

தேவனுடைய பார்வை மனிதனுடைய பார்வைக்கு எவ்வளவாக வேறுபட்டிருக்கிறது! இயேசுவானவரின் உவமைக்கதையில் வரும் ஐசுவரியவானை அறிந்த பெரும்பாலானவர்கள் அவனைக் கண்டு பொறாமைப்பட்டார்கள், ஆனால் தேவனோ அவன்மீது பரிதாபம் கொண்டார். அவன் மனிதருடைய பார்வையில் செல்வந்தனாக இருந்தான். ஆனால் தேவனுடைய பார்வையில் ஏழையாகவே இருந்தான். அவன் நித்தியமாகத் தனக்குரியதாக இருக்கும்படி பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்திருக்கலாம். ஆனால் அவன் மரிக்கும் அதே கணத்தில் அவனுக்கு உதவியாக இராமல் போகும்படி அவன் பூலோகத்தில் பொக்கிஷங்களைச் சேகரித்து வைத்தான். பேராசையுள்ள மக்களைக் குறித்து இயேசுவானவர் போதித்திருப்பவைகளின் அடிப்படையில் இந்த ஐசுவரியவான் மரித்தபோது பரலோகம் செல்ல முடியாது என்பதை நாம் அறியும்படியே அவர் விரும்புகிறார்.

நாம் பெற்றிருக்கும் எல்லாமே தேவனிடமிருந்து வரும் ஈவு என்பதை நாம் நினைவில் வைத்திருப்பதற்கு இந்த உவமைக்கதை நமக்கு உதவிசெய்ய வேண்டும். நாம் அவருக்கு உண்மையுள்ள உக்கிராணிகளாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். உலகப் பிரகாரமான செல்வத்தைக் கொண்டிருப்பவர்களுக்கு மட்டுமின்றி, இத்தகைய செல்வத்துக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கும் எல்லோருக்கும் இது போதனையைக் கொடுக்கிறது. அவர் தொடர்ந்து தமது சீஷர்களுக்குப் போதித்தபோது இதைத் தெளிவுபடுத்தினார்:

> பின்னும் அவர் தம்முடைய சீஷரை நோக்கி: இப்படியிருக்கிறபடியினால், என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது. காகங்களைக் கவனித்துப்பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப்பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான். மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக் கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப் படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்படியிருக்க, அற்ப விசுவாசிகளே, இன்றைக்குக் காட்டிலிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள். இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித் தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.
>
> உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பை களையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் [லூக்கா 12:22–34].





இயேசுவானவரின் வார்த்தைகளுக்கு இன்றைய ‘‘செழிப்பைக் குறித்த பிரசங்கிமார்களின்’’ வார்த்தைகள் எவ்வளவு முரண்பாடானவையாக இருக்கின்றன! இயேசுவானவர் தமது சீஷர்களிடம் இருக்கும்

உடைமைகளை அவர்கள் விற்று, ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார், ஆனால் இவர்களோ நாம் அதிகமாகப் பெற வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் என்று போதிக்கிறார்கள். இந்த உலகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பவர்களின் மூடத்தனத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். இங்கே இந்தப் பொக்கிஷங்கள் அழிந்துபோகும், இங்கேதான் பொக்கிஷங்களை வைத்திருப்பவர்களின் இருதயம் இருக்கிறது.

தங்களிடம் கொஞ்சமாக இருக்கிறபடியால் உணவுக்காவும் உடைக்காகவும் கவலைப்படுகிறவர்களுக்கு இயேசுவானவர் இந்த உவமைக் கதையைப் பொருத்திக் கூறுவதைக் கவனியுங்கள். இப்படிப்பட்ட காரியங்களுக்காகக் கவலைப்படுவது நமது பார்வை தவறாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. நம்மீது கரிசனை கொண்டிருக்கும் பிதாவானவரின்மீது நாம் நம்பிக்கை வைப்போமானால் நாம் கவலைப்பட மாட்டோம். தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்பு வதில் அதிகக் கவனத்தைச் செலுத்துவோம்.

## கிறிஸ்துவின் முன்மாதிரி

இயேசுவானவர் பணத்தைக் குறித்து மேலும் பல காரியங்களைச் சொல்லியிருக்கிறார். சீஷர்களை உருவாக்கும் ஒவ்வொரு ஊழியரும் செய்ய வேண்டிய விதமாக அவர் தமது முன்மாதிரியின் மூலமாகப் போதித்திருக்கிறார். தாம் எதைச் செய்தாரோ அதையே அவர் பிரசங்கித்தார். இயேசுவானவர் எப்படி வாழ்ந்தார்?

இயேசுவானவர் தமது சூழ்நிலையைப் பயன்படுத்தி செல்வந்தனாக ஆகியிருக்க முடியும் என்றாலும் அவர் உலகப் பிரகாரமான செல்வத்தைச் சேர்த்து வைக்கவில்லை. பல வரம்பெற்ற ஊழியர்கள் தங்கள் ஊழியத்தின்மூலமாகப் பணம் வருமானால், தாங்கள் தனிப்பட்ட முறையில் செல்வந்தராக இருக்க வேண்டும் என்றே தேவன் நினைக்கிறார் என்று தவறாக அனுமானித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இயேசுவானவர் தமது அபிஷேகத்தைத் தனிப்பட்ட ஆதாயத் துக்காகப் பயன்படுத்தவில்லை. அவரிடம் கொடுக்கப்பட்ட பணம் சீஷர்களை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. தாம் சீஷராக்கிக் கொண்டிருந்த குழுவினர் தம்மோடுகூடப் பயணம் செல்லுவதற்கான செலவுகளையும் அவரே ஏற்றுக்கொண்டார்.[97] இன்று

[97] செழிப்பைக் குறித்துப் பிரசங்கிப்பவர்கள் இயேசுவின் ஊழியம் செழிப்பாக இருந்தது என்பதைக் காட்ட இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். இயேசு தமது ஊழியத்தை நிறைவேற்றும்படியாகத் தேவன் அவருடைய தேவைகளைச் சந்தித்தார் என்பதில் ஐயமில்லை. இயேசுவுக்கும் செழிப்பைக் குறித்துப் பிரசங்கிப்பவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு இயேசு ஊழியத்துக்கு வரும் பணத்தைச் சுயநலமாகத் தமக்காகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.





இளம் சீஷர்கள் வேதாகமப் பள்ளிகளில் முதிய ஊழியர்களின் விரிவுரை களைக் கேட்பதற்காகப் பணம் செலுத்திச் சேர வேண்டியிருக்கிறது. ஆனால் இதற்கு எதிர்மாறானதுக்கே இயேசுவானவர் முன்மாதிரியாக இருந்தார்.

தமது பிதாவானவர் தமக்குரிய எல்லாத் தேவைகளையும் சந்திப்பார், மற்றவர்களுடைய தேவைகளைத் தாம் சந்திக்கும்படியாகத் தம்மை ஆசீர்வதிப்பார் என்ற நம்பிக்கையின் வாழ்க்கையை இயேசு வாழ்ந்தார். சில வேளைகளில் அவரை விருந்துக்கு அழைத்தார்கள், சில வேளைகளில் வயல்களிலுள்ள கதிர்களைக் கொய்து தின்றார் [பார்க்க, லூக்கா 6:1].

குறைந்தபட்சம் இரண்டு முறை அவர் தமது பேச்சைக் கேட்க வந்த ஆயிரக்கணக்கான பேர்களுக்கு உணவளித்தார். இது நவீன கிறிஸ்தவ மாநாடுகளுக்கு எப்படி வேறுபட்டதாக இருக்கிறது. இந்த மாநாடுகளில் பேசுபவர்களின் பேச்சைக் கேட்க நுழைவுக் கட்டணம் செலுத்திவிட்டுத்தான் உள்ளே செல்ல வேண்டும். எங்களுடைய ஊழியர்களின் மாநாடுகளில் கலந்துகொள்ளுபவர்களுக்கு நாங்கள் இலவசமாக உணவளிப்பதைக் கண்டு ‘‘மக்கள் எங்களுக்குச் செவி கொடுக்கும்படி செய்ய’’ நாங்கள் அவர்களுக்கு உணவு கொடுப்பதாகக் கேலிசெய்திருக்கிறார்கள். உண்மையில் நாங்கள் இயேசுவின் முன்மாதிரியையே பின்பற்றுகிறோம்.

இயேசுவானவர் ஏழைகளின்மீது கரிசனை காட்டினார். அவருடைய குழுவில் ஒரு பணப்பை வைக்கப்பட்டிருந்தது, அதிலிருந்து எடுத்து ஏழைகளுக்கு உதவினார்கள். ஏழைகளுக்குக் கொடுப்பது இயேசுவானவரின் ஊழியத்தின் ஒரு ஒழுங்கான அம்சமாக இருந்தபடியால், கடைசி இராப்போஜனத்தின்போது இயேசுவானவர் யூதாஸ்காரியோத்திடம் ‘‘நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்’’ என்று சொன்னபோது மற்றச் சீஷர்கள் ‘‘அவன் போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார்’’ என்று நினைத்தார்கள் [பார்க்க, யோவான் 13:27—30].

இயேசுவானவர் மெய்யாகவே தமது அயலாரைத் தம்மைப்போல நேசித்தார். எனவே அவர் எளிமையாக வாழ்ந்து, தம்மிடம் இருப்பவை களைப் பகிர்ந்துகொண்டார். யோவான்ஸ்நானன் இப்படிப் பிரசங்கித்த போது அவர் அதைக்குறித்து மனந்திரும்ப வேண்டியிருக்கவில்லை: ‘‘இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக் கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்’’ [லூக்கா 3:11]. இயேசுவானவரிடம் ஒரேயொரு அங்கி மட்டுமே இருந்தது. என்றாலும் செழிப்பைக் குறித்துப் பிரசங்கிப்பவர்கள் இயேசு தையலில்லாமல் முழுவதுமாக நெய்யப்பட்ட அங்கியை அணிந்திருந்தார்,

செல்வந்தவர்கள் மட்டுமே இப்படிப்பட்ட ஆடையை அணிந்ததாகக் கருதப்படுகிறது, எனவே இயேசு செல்வந்தராக இருந்தார் என்று போதிக்கிறார்கள் [பார்க்க, யோவான் 19:23]. வேறுபல வேதவசனங் களுக்கு முரண்பாடாக இருக்கும் ஒன்றை நிரூபிப்பதற்கு ஒருவரால் எப்படியெல்லாம் ஒரு வேதவசனத்தைப் பயன்படுத்த முடிகிறது! அவர் தையலில்லாத *வெளி* ஆடையை அணியாதபடியால் அவர் நமது செல்வத்தை *மறைத்து* வைக்க முயன்றார் என்ற முடிவுக்கு நாம் வருவோமானால் அது எப்படிப்பட்ட அபத்தமாக இருக்கும்!

இயேசுவானவர் பணத்தைக் குறித்துச் சொல்லும் மேலும் பல காரியங்களை ஆய்வுசெய்ய நமக்கு இடமில்லை. வேதவசனங்களைத் திரித்து, ஒரு பாவமும் அறியாதவர்களை ஏமாற்றுவதில் வல்லவர்களாக இருக்கும் செழிப்பைக் குறித்த பிரசங்கிமார்களின் மேலும் சில பொதுவான போதனைகளைக் குறித்து நாம் பார்ப்போம்.

### ''தேவன் சாலொமோனைச் செல்வந்தனாக்கினார்''

தங்கள் பேராசையை மறைக்கச் செல்வத்தைக் குறித்துப் பிரசங்கிக்கும் பல பிரசங்கிமார்கள் இப்படியாக நியாயப்படுத்த முயலுகிறார் கள். தேவன் ஒரு காரணத்துக்காகவே சாலொமோனுக்குச் செல்வத்தைக் கொடுத்தார் என்பதைக் காண அவர்கள் தவறிவிடுகிறார்கள். சாலொமோன் எதைக் கேட்டாலும் தாம் அதைத் தருவதாக தேவன் சொல்லியபோது சாலொமோன் மக்களை ஆளுகைசெய்வதற்கான ஞானத்தைக் கேட்டதே இதற்குக் காரணமாகும். சாலொமோன் செல்வத்தைக் [பிற காரியங்களையும்] கேட்காமல் ஞானத்தைக் கேட்டது தேவனுக்குப் பிரியமாக இருந்தபடியால், அவர் தாமே ஞானத்தோடு செல்வத்தையும் சேர்த்துக்கொடுத்தார். ஆனால் தேவன் நோக்கம்கொண்டபடி சாலொமோன் தேவனால் தனக்குக் கொடுக்கப்பட்ட ஞானத்தைப் பயன்படுத்தவில்லை. இதன்விளைவாக அவன் இறுதியில் உலகத்தில் வாழ்ந்த மூடர்களில் மோசமானவனானான். அவன் ஞானமுள்ளவனாக இருந்திருப்பானானால் தேவன் அவன் பிறப்பதற்கு முன்பாகவே இஸ்ரவேலருக்குச் சொல்லிய வார்த்தைகளுக்குச் செவிசாய்த்திருப்பான்:

> உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்பவனையே உனக்கு ராஜாவாக வைக்கக்கடவாய்; உன் சகோதரருக்குள்ளிருக்கிற ஒருவனையே உன்மேல் ராஜாவாக ஏற்படுத்தக்கடவாய்; உன் சகோதரன் அல்லாத அந்நியனை ராஜாவாக ஏற்படுத்தக்கூடாது. அவன் அநேக குதிரைகளைச் சம்பாதியாமலும், அநேக குதிரைகளைத் தனக்குச் சம்பாதிக்கும்படிக்கு ஜனங் களைத் திரும்ப எகிப்திற்குப் போகப்பண்ணாமலும் இருக்கக்கடவன்; இனி அந்த வழியாய் நீங்கள் திரும்பிப்போகவேண்டாம் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரே. அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்க வேண்டாம்; வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதி யாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம் [உபாகமம் 17: 15—17].





இது செழிப்பைக் குறித்துப் பிரசங்கிப்பவர்கள் எப்போதும் புறக்கணிக்கும் ஒரு வேதபகுதியாகும். சாலொமோனும் இதைப் புறக்கணித்துத் தனக்கு அழிவைத் தேடிக்கொண்டான். அவனைப் போலவே அவர்களும் விக்கிரகாராதனைக்காரர்களாக ஆகிறார்கள். சாலொமோனின் இருதயம் அவனுடைய மனைவிமார்களாலேயே திசை மாறும்படி செய்யப்பட்டது. அவன் தனது பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியதின் காரணமாகவே அவனுக்கு பல மனைவிகள் கிடைத்தார்கள்.

தேவன் தாம் சாலொமோனுக்குக் கொடுத்த செல்வத்தின்மூலம் அவன் அயலாரைத் தன்னைப் போல நேசிப்பான் என்று தேவன் எதிர் பார்த்தார். ஆனால் அவன் தன்னைத்தான் நேசிக்க மட்டுமே அதைப் பயன்படுத்தினான். அவன் தேவனுடைய கட்டளைக்கு நேரடியாகக் கீழ்ப்படியாத விதமாகத் தங்கத்தையும், வெள்ளியையும், குதிரையையும், மனைவிமார்களையும் பெருக்கினான். அவன் இறுதியில் எழுநூறு பெண்களைத் திருமணம் செய்துகொண்டான், முந்நூறு மறுமனை யாட்டிகளை வைத்திருந்தான். இப்படியாக ஆயிரம் பேருக்கு உரிய மனைவிமார்களைக் கொள்ளையடித்தான். ஏழைகளுக்குக் கொடுப் பதற்கு மாறாக, சாலொமோன் தனது ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டான். சாலொமோன் சுயநலமுள்ளவனாகவும், விக்கிரகாரா தனைக்காரனாகவும் இருந்தாலும், செழிப்பைக் குறித்துப் பிரசங்கிப் பவர்கள் அவனை ஒவ்வொரு புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக எடுத்துச்சொல்லுவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது! *கிறிஸ்து*வைப்போல ஆகுவது நமது இலக்கு இல்லையா?

### ''தேவன் ஆபிரகாமைச் செல்வந்தனாக ஆக்கினார், ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் நமக்கு வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.''

கலாத்தியர் மூன்றாம் அதிகாரத்தில் பவுலின் வார்த்தைகளைக் கொண்டு நியாயப்படுத்த முயலுகிறார்கள். அடிக்கடி தவறாக மேற்கோளாகக் கொடுக்கப்படும் வசனத்தை அதன் பின்னணியோடு இங்கே கொடுத்திருக்கிறேன்:

> மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக்

> கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. *அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.* நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற் குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே. நியாயப் பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்க மாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான். மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். *ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும்,* ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று [கலா. 3:8–14 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பவுல் அப்போஸ்தலன் பதினான்காம் வசனத்தில் குறிப்பிடும் ‘‘ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம்’’ என்பது ஆபிரகாமுக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதமாகும் [இதைக்குறித்துப் பவுல் எட்டாம் வசனத்தில் குறிப்பிட்டிருக்கிறார்]. இந்த ஆசீர்வாதம் உண்மையில் *ஆபிரகாமின் சந்ததியாகிய* இயேசுவே என்று அவர் ஒருசில வசனங்கள் கழித்து விளக்கம் கொடுத்திருக்கிறார் [கலா. 3:16]. நாம் இப்போது வாசித்த படி, உலகத்தின் பாவங்களுக்காகச் சாபமாகிய சிலுவையில் மரித்து, இயேசுவானவர் எல்லா ஜாதியாருக்கும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தார். எனவே ‘‘புறஜாதிகளுக்கு வரும் ஆபிரகாமின் ஆசீர்வாதம்’’ என்பது தேவன் ஆபிரகாமைப் போலப் புறஜாதியாரையும் செல்வந்தராக ஆக்குவதைக் குறித்து அல்ல, ஆபிரகாமின் வித்தின் மூலமாகச் சகல ஜாதியாருக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லும் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்ததாகும். இயேசுவானவர் சிலுவையில் அவர்களுக்காக





மரித்ததின்மூலம் இது நிறைவேறியது. [இந்தப் பகுதியில் பவுலின் கருப்பொருள் இயேசுவை விசுவாசிப்பதின்மூலம் யூதர்களைப் போலப் புறஜாதியாரும் இரட்சிக்கப்பட முடியும் என்பதாகும்].

### மற்றொரு வகையாகத் திரித்துக்கூறுதல்

இந்தப் பகுதியானது செழிப்பைக் குறித்துப் பிரசங்கிக்கிறவர்களால் தங்கள் கோட்பாட்டை நியாயப்படுத்துவதற்காக மற்றொரு வகையில் திரித்துக் கூறப்படுகிறது. நியாயப்பிரமாணமானது அதைக் கைக் கொள்ளாதவர்களுக்கு ஏழ்மையின் சாபத்தைக் கொடுத்திருக்கிற படியினாலும் [பார்க்க, உபா. 28:30, 31–33, 38–40, 47–48, 51, 68], பவுல் அப்போஸ்தலன் கலாத்தியர் 3:13 வசனத்தில் ‘‘கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்’’ என்று சொல்லியிருக்கிறபடியாலும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் ஏழ்மையின் சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

முதலாவதாக, பவுல் அப்போஸ்தலன் ‘‘நியாயப்பிரமாணத்தின் சாபம்’’ என்று குறிப்பிடும்போது, அவர் உபாகமம் 28ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாபங்களைக் கருத்தில் கொண்டிருந்தார் என்பதே விவாதத்துக்கு ஆளாகக் கூடியதாகும். பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபங்களிலிருந்து [பன்மை] மீட்டுக் கொண்டார் என்று சொல்லாமல், நியாயப்பிரமாணத்தின் ‘‘சாபம்’’ என்று ஒருமையில் சொல்லியிருப்பதின்மூலம் நியாயப்பிரமாணம் முழுவதுமே அதன்மூலமாக இரட்சிப்பைச் சம்பாதிக்க முயலுகிறவர்களுக்குச் சாபமாகி விட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கலாம். கிறிஸ்துவினால் மீட்கப்பட்டபிறகு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதின்மூலம் நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முயலும் தவறைச் செய்ய மாட்டோம். அதாவது நாம் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்கப்பட்டிருக் கிறோம்.

பவுல் அப்போஸ்தலன் உபாகமம் 28ஆம் அதிகாரத்தில் பட்டியலிடப் பட்டுள்ள ஒவ்வொரு பயங்கரமான காரியத்திலிருந்தும் நம்மை மீட்டுக் கொள்ளுவதாகச் சொல்லி, நமது பொருளாதாரச் செழிப்புக்கான உத்தரவாதத்தைக் கொடுத்திருப்பாரானால், பிறகு ஏன் அவர் தம்மைக் குறித்து இப்படி எழுதியிருக்கிறார் என்று நாம் திகைப்படைய வேண்டி யிருக்கும்: ‘‘இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர் களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர் களுமாயிருக்கிறோம்’’ [1 கொரி. 4:11]. அவர் ஏன் இப்படி எழுதியிருக் கிறார் என்றும் நாம் வியப்படைகிறோம்:

> கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?
> உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ,

நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவை யெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிற வராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக் கிறோமே [ரோமர் 8:36–37].

எல்லாக் கிறிஸ்தவர்களும் நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு நீங்கலாகும்படியாகக் கிறிஸ்துவால் மீட்கப்பட்டிருக்கிறபடியால், அவர்கள் துன்பங்கள், பசி, பட்டினி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் இவைகளிலிருந்து விலக்கப்பட்டிருப்பார்களானால், பவுல் இந்த வார்த்தைகளை எழுதியிருக்க மாட்டார்.

கீழ்க்கண்ட பரலோக காட்சியை இயேசுவானவர் ஏன் முன்னறிவித் தார் என்றும்கூட நாம் திகைப்படைய வேண்டியிருக்கும்:

அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத் தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லா திருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ள வராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவர்களாகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாத வராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: *மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்* என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் [மத். 25:34–40 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].





''நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து'' மீட்கப்பட்ட சில விசுவாசிகள் ஏழ்மை நிலையில் இருப்பார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. என்றாலும் இயேசுவானவர் விவரித்த மோசமான சூழ்நிலைகளிலும் தேவன் பாடுபடும் விசுவாசிகளின் தேவைகளைச் சந்தித்தார் என்பதையும், அவர் அதை தங்களுடைய தேவைகளுக்கும் மேலாக வைத்திருக்கும் மற்ற விசுவாசிகளின்மூலமாகச் சந்தித்தார் என்பதையும் கவனியுங்கள். தாற்காலிகமாக அதற்கு விரோதமாகத் தோன்றினாலும் தேவன் எப்போதும் நமது தேவைகளைச் சந்திப்பார் என்று நம்மால் எதிர்பார்க்க முடியும்.

இறுதியாக, ஆபிரகாமைப்போலச் செல்வந்தனாக இருக்க விரும்பும் செழிப்பைக் குறித்துப் போதிக்கும் பிரசங்கிமார்கள் ஆபிரகாமைப்போல மின்சாரமோ அல்லது சுத்தமான தண்ணீரோ இல்லாமல் ஒரு கூடாரத்தில் வாழ்நாள் முழுவதையும் கழிக்க ஆயத்தமாக இருப்பார்களா? பழைய ஏற்பாட்டில் தேவனால் செல்வத் தினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு அபரிமிதமானதை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு அதன்மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டார்கள். ஆபிரகாம் இதைச் செய்தார். அவர் நூற்றுக்கணக்கானவர்களின் தேவைகள் சந்திக்கப்படும்படி அவர்களுக்கு வேலை கொடுத்தார் [பார்க்க, ஆதி. 14:14]. யோபுவும் இதைச் செய்தார். அவர் விதவைகளையும் அனாதைகளையும் பராமரிக்கத் தனது செல்வத்தைப் பயன்படுத்தினார் [யோபு 29:12–13; 31:16–22]. தொழில்களின்மூலம் ஆதாயம் பெறும் வரத்தைக் கொண்டிருப்பவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதும், தங்களைப் போல அயலாரையும் நேசிப்பதும் தங்களுக்கு முக்கியமான காரியங்களாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### ''நாம் செல்வந்தராகும்படி இயேசு ஏழையானார் என்று வேதவசனம் சொல்லுகிறது.''

வேதாகமம் இப்படிச் சொல்லியிருப்பது உண்மைதான்:

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரிய முள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத் தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே [2 கொரி. 8:9].

இயேசுவானவர் *பொருள்ரீதியாகப்* பரலோகத்தில் செல்வந்தராக இருந்தார் என்றும் *பொருள்ரீதியாக* அவர் பூமியில் ஏழையாக ஆனார் என்றும், எனவே பவுல் இதை எழுதியபோது *பொருள்ரீதியான* ஐசுவரியத் தையே கருத்தில் கொண்டிருந்தார் என்றும், கிறிஸ்துவின் ஏழ்மையின் மூலம் தமது எழுத்தை வாசிப்பவர்கள் *செல்வந்தராக* வேண்டும் என்பதே அவருடைய எண்ணம் என்றும் விவாதிக்கிறார்கள். வசனத்தின் முதல்

பகுதியில் பவுல் அப்போஸ்தலன் *பொருள்ரீதியான* செல்வத்தையும் ஏழ்மையையும் குறித்தே கூறியிருக்கிறபடியால் இரண்டாம் பகுதியில் அவர் *ஆவிக்குரியரீதியான* செல்வத்தைக் குறிப்பிட்டிருக்க முடியாது என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

2 கொரிந்தியர் 8:9 வசனத்தில் பவுல் அப்போஸ்தலன் நாம் பொருள்ரீதியான செல்வத்தைப் பெறும்படியாகக் கிறிஸ்து பொருள் ரீதியான ஏழ்மையை எடுத்துக்கொண்டார் என்ற அர்த்தத்தில் சொல்லி யிருப்பாரானால், ஏன் சில அதிகாரங்கள் கழித்து அவர் அதே நிருபத்தில் இப்படிச் சொல்லியிருக்க வேண்டும் என்று நாம் திகைக்கிறோம்:

> பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன் [2 கொரி. 11:27].

2 கொரிந்தியர் 8:9 வசனத்தில் பவுல் அப்போஸ்தலன் நாம் பொருள்ரீதியான செல்வத்தைப் பெறும்படியாகக் கிறிஸ்து பொருள் ரீதியான ஏழ்மையை எடுத்துக்கொண்டார் என்ற அர்த்தத்தில் சொல்லி யிருப்பாரானால் இயேசுவின் நோக்கம் பவுலின் வாழ்க்கையில் நிச்சயமாக நிறைவேறவில்லை. எனவே நாம் பொருள்ரீதியான செல்வத்தைப் பெறும்படியாகக் கிறிஸ்து பொருள்ரீதியான ஏழ்மையை எடுத்துக்கொண்டார் என்ற அர்த்தத்தில் இதைச் சொல்லவில்லை என்பது தெளிவாகிறது. நாம் ஆவிக்குரிய பிரகாரமாகச் செல்வந்தராக ஆவோம், இயேசுவானவர் சொல்லியபடி ''தேவனிடத்தில் ஐசுவரிய வானாயிருப்போம்'' என்பதே அவர் சொல்லியதின் அர்த்தமாகும் [பார்க்க, லூக்கா 12:21]. நமது இருதயமும் பொக்கிஷங்களும் இருக்கும் பரலோகத்தில் நாம் செல்வந்தராக இருப்போம்.

செழிப்பைக் குறித்த பிரசங்கிமார்கள் சொல்லுகிறதுபோல, வசனத்தின் முதல் பகுதியில் பவுல் அப்போஸ்தலன் *பொருள்ரீதியான* செல்வத்தையும் ஏழ்மையையும் குறித்தே கூறியிருக்கிறபடியால் இரண்டாம் பகுதியில் அவர் *ஆவிக்குரியரீதியான* செல்வத்தைக் குறிப்பிட்டிருக்க முடியாது என்று அனுமானிப்பது மெய்யாகவே சரியானதுதானா? சிமிர்னா சபைக்கு இயேசுவானவர் சொன்ன இந்த வார்த்தைகளைச் சிந்தித்துப் பாருங்கள்:

> உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும்... அறிந்திருக்கிறேன் [வெளி. 2:9].

சிமிர்னாவிலுள்ள விசுவாசிகள் *ஆவிக்குரிய* பிரகாரமாகச் செல்வந்தர்களாக இருந்தாலும், *பொருள்ரீதியாக* அவர் தரித்திரர்களாக இருந்தார்கள் என்பது இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





### ''நாம் கொடுக்கும்போது நூறத்தனையாக அதைத் திரும்பக் கொடுப்பதாக இயேசுவானவர் வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார்.''

சில தியாகங்களைச் செய்கிறவர்களுக்கு நூறத்தனையாகப் பயன் கிடைக்கும் என்று இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்திருப்பது உண்மைதான். அவர் என்ன கூறியிருக்கிறார் என்பதை நாம் பார்ப்போம்:

> அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் [மாற்கு 10:29–30].

செழிப்பைக் குறித்துப் பிரசங்கிப்பவர்கள் சொல்லுகிறதுபோல இது பிரசங்கிமார்களுக்குப் பணம் கொடுப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தம் அல்ல. மாறாக, தொலைவான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காகத் தங்கள் வீடுகளையும், நிலங்களையும், உறவினர்களையும் விட்டுவிட்டுச் செல்லுகிறவர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள வாக்குத்தத்தமாகும். அவர்களுக்கு ''இம்மையிலே'' இருப்பதைவிட ''நூறத்தனையாகக்'' கிடைக்கும் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

ஆனால் செழிப்பைக் குறித்துப் பிரசங்கிப்பவர்கள் சொல்லுவது போல அவர்கள் நூறு வீடுகளுக்கும் நிலங்களுக்கும் சொந்தக்காரர்களாக ஆவார்களா? இல்லை, அவர்கள் எப்படி நூறத்தனையாகத் தாய்மார்களையும், பிள்ளைகளையும் பெற மாட்டார்களோ அப்படியே அவர்கள் நூறத்தனையாக வீடுகளையும் பெற மாட்டார்கள். ஊழியம் செய்யும்படி தங்கள் வீடுகளையும், குடும்பங்களையும் விட்டு வருகிறவர்களுக்குச் சக விசுவாசிகள் தங்கள் வீடுகளைத் திறந்துகொடுத்து, அவர்களையும் தங்கள் குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதே இயேசுவானவர் சொல்லியதின் அர்த்தமாகும்.

இப்படிப்பட்டவர்களுக்கு இயேசுவானவர் துன்பங்களையும், நித்தியஜீவனையும் வாக்குத்தத்தமாகச் சொல்லியிருக்கிறார் என்பதையும் கவனியுங்கள். இது இந்த முழுப் பகுதியின் பின்னணியையும் நமக்கு நினைவுபடுத்துகிறது. நித்திய ஜீவனை விரும்பிய ஒரு

செல்வந்தனான இளைஞன் வருத்தத்தோடு விலகிச் சென்றபோது இயேசு இப்படிச் சொல்லியதைச் சீஷர்கள் கண்டிருக்கிறார்கள்: ''ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்'' [மாற்கு 10:25].

இயேசுவானவர் சொல்லியதைக் குறித்துச் சீஷர்கள் அதிர்ச்சி யடைந்தார்கள். தாங்களும் பரலோகம் செல்ல முடியுமா என்று நினைக்கத் துவங்கினார்கள். தாங்கள் அவரைப் பின்பற்றுவதற்காக எவைகளை விட்டுவந்தோம் என்பதை அவருக்கு நினைவுபடுத்தினார்கள். அப்போதுதான் இயேசு ''நூறத்தனையான'' பெருக்கத்தைக் குறித்த இந்த வாக்குத்தத்தத்தைச் சொன்னார்.

இவை இப்படியிருக்கிறபடியால், நித்திய வாழ்வைப் பெற வேண்டுமானால் தன்னுடைய செல்வத்தை விற்று ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று இயேசுவானவர் ஒரு செல்வந்தனான இளைஞனுக்குச் சொல்லியிருக்கும் பின்னணியில், அவர் நாம் கொடுக்கும்போது நூறத்தனையான பொருளாதார ஆதாயத்தைப் பெற்று, உடனடியாகச் செல்வந்தராக ஆவோம் என்றுதான் சொல்லுகிறார் என்று நம்மை நம்ப வைக்க செழிப்பைக் குறித்துப் பிரசங்கிக்கும் எந்தப் பிரசங்கியாரும் முயலுவது எப்படிப்பட்ட முடியாத காரியமாக இருக்கிறது.

இந்தப் புத்தகத்தில் நாம் ஆராய்ந்து பார்த்த வசனங்களுக்கு அப்பால் மேலும் பல வசனங்களையும் செழிப்பைக் குறித்துப் பிரசங்கிக்கிறவர்கள் திரித்துக் கூறுகிறார்கள். அவைகளை எடுத்துச் சொல்ல இங்கே இடமில்லை. நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்!

### நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒரு பொன்மொழி

இங்கிலாந்தில் மெதாடிஸ்ட் இயக்கத்தின் ஸ்தாபகரமான ஜாண் வெஸ்லி நாம் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒரு பொன்மொழி யைச் சொல்லியிருக்கிறார்: ''உங்களால் முடிந்தவரை சம்பாதியுங்கள்; உங்களால் முடிந்தவரை சேமித்துவையுங்கள்; உங்களால் முடிந்த எல்லா வற்றையும் கொடுங்கள்.''

அதாவது, முதலில் ஒரு கிறிஸ்தவர் தேவனால் தனக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் திறமைகளையும், பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புக் களையும் பயன்படுத்தி, கடுமையாக உழைத்துப் பணத்தைச் சம்பாதிக்க வேண்டும். ஆனால் நேர்மையோடு, கிறிஸ்துவின் எந்தக் கட்டளையையும் மீறாமல் இதைச் செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, எளிமையாகவும், சிக்கனத்தோடும் வாழ்ந்து, ''முடிந்தவரை சேமித்து வைக்கும்படியாக'' தனக்காகக் குறைவாகச் செலவழிக்க வேண்டும்.





இறுதியாக, இந்த இரண்டு அடிகளையும் பின்பற்றியபிறகு, தசமபாகத்தோடு நிறுத்திக்கொள்ளாமல், தங்களால் முடிந்த எல்லா வற்றையும் கொடுக்க வேண்டும். உலகெங்கிலும் சுவிசேஷம் பிரசங்கிக் கப்படும்படியாகவும், விதவைகளும் அனாதைகளும் போஷிக்கப்படும் படியாகவும் கொடுப்பதற்காகத் தன்னால் முடிந்த வரையில் தன்னைத் தானே ஒறுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட உக்கிராணத்துவத்தைத் துவக்க காலச் சபை நிச்சயமாகப் பிரசங்கித்தது. தங்களிடமிருப்பதைத் தங்களுக்கு நடுவில் தேவையிலிருக்கும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுவது புதிய ஏற்பாட்டு வாழ்க்கையின் ஒழுங்கான அம்சமாகக் காணப்பட்டது. இயேசுவானவர் தம்மைப் பின்பற்றியவர்களுக்கு இப்படிக் கட்டளை யிட்டதை அவர்கள் தீவிரமாகப் பின்பற்றினார்கள்: ''உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பை களையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறது மில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை'' [லூக்கா 12:33]. துவக்ககாலச் சபையைக் குறித்து லூக்கா இப்படி எழுதியிருக்கிறார்:

> விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சி களையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக் கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள் ... விசுவாசி களாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த் தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்; அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங் களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை [அப். 2:44–45; 4:32–35].

துவக்ககாலச் சபையில் ஏழை விதவைகளின் தேவைகளும் கவனிக்கப்பட்டன என்பதை வேத வசனங்களிலிருந்து நாம் அறிகிறோம் [பார்க்க, அப். 6:1; 1 தீமோ. 5:3–10].

இதுவரை வாழ்ந்தவர்களிலேயே பெரிய அப்போஸ்தலனாகிய பவுல், புறஜாதியாருக்கு ஊழியம் செய்யும்படி தேவனால் அழைக்கப் பட்டவரும், புதிய ஏற்பாட்டு நிருபங்களில் அதிகமானவைகளை எழுதிய வருமாகிய பவுல், ஏழைகளின் பொருள்ரீதியான தேவைகளைக் கவனிப்பது தனது ஊழியத்தின் அத்தியாவசியமான அம்சங்களில் ஒன்று என்று கருதினார். தாம் ஸ்தாபித்த சபைகளில் ஏழைகளுக்காக அவர் அதிகமான பணத்தைச் சேகரித்தார் [பார்க்க, அப். 11:27–30; 24:17; ரோமர் 15:25–28; 1 கொரி. 16:1–4; 2 கொரி. 8:9; கலா. 2:10]. அவர் மனமாற்றம் பெற்றுக் குறைந்தபட்சம் பதினேழு ஆண்டுகள் கழிந்த பின்பு, அவர் எருசலேமுக்குப் பயணமாகச் சென்று தான் பெற்றுக் கொண்ட சுவிசேஷத்தைப் பேதுரு, யாக்கோபு, யோவான் இவர்கள் ஆராய்ந்து பார்க்கும்படி ஒப்புக்கொடுத்தார். அவர்களில் எவரும் அவர் பிரசங்கித்த செய்தியில் எந்தத் தவறையும் கண்டுபிடிக்கவில்லை. கலாத்திய நிருபத்தில் இதைக் குறிப்பிடும்போது பவுல் ''தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்'' என்று சொல்லியிருக்கிறார் [கலா. 2:10]. பேதுரு, யாக்கோபு, யோவான், பவுல் இவர்களுடைய சிந்தையில் ஏழைகளுக்கு மனதுருக்கம் காண்பிப்பது, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அடுத்த இடத்தைப் பெற்றிருந்தது.

**சுருக்கம்**

இதைக் குறித்துச் சிறந்த ஆலோசனையைப் பவுல் சீஷர்களை உருவாக்கும் ஊழியர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது'' என்று அவர் தீமோத்தேயுவை எச்சரித்த பிறகு, ''சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக் கிறார்கள்'' என்பதை அறிவித்த பிறகு, இப்படியாக ஆலோசனை கொடுத்திருக்கிறார்:

> *நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத் தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத் தையும் அடையும்படி நாடு* [1தீமோ. 6:11].



# 33

# சுவிசேஷ ஊழியத்தின் இரகசியங்கள்

ஆபிரகாம் தனது அன்புக்குரிய குமாரனைப் பலியிடச் சித்தமாக இருந்தபோது, தேவன் அவனுக்கு ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்:

> நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக் கப்படும் [ஆதி. 22:18].

இந்த வாக்குத்தத்தமானது ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக் கும் [ஒருமை] கொடுக்கப்பட்டது, சந்ததிகளுக்கு [பன்மை] அல்ல என்று அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டியிருக்கிறார். இயேசுவே அந்தச் சந்ததியாவார் [பார்க்க, கலா. 3:16]. கிறிஸ்துவில் எல்லா ஜாதிகளும், எல்லா இனக்குழுக்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த வாக்குத்தத்தத்தில் உலகெங்கிலுமுள்ள ஆயிரக்கணக்கான புறஜாதி இனக்குழுக்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் கிறிஸ்துவுக்குள் இருப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவார்கள். இவர்கள் வெவ்வேறான பூகோளப் பகுதிகளில் இருப்பதினாலும், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாகவும், வெவ்வேறு கலாச்சாரம் மற்றும் மொழிகளைக் கண்டிருப்பதினாலும், ஒருவருக்கொருவர் வேறுபட் டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப் பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதனால்தான் இயேசு வானவர் முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் மரித்தார் [பார்க்க, 1 யோவான் 2:2].

ஜீவனுக்குச் செல்லும் பாதை இடுக்கமானது, ஒருசிலரே அதைக் கண்டுபிடிக்கிறார்கள் என்று இயேசுவானவர் சொல்லியிருந்தாலும்